# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044-- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 32 /மா/2022**
**நாள் : 26.04.2022**

திரு. S. தனசேகர்,
நுங்கம்பாக்கம், சென்னை– 34. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–9, பெருநகர சென்னை மாநகராட்சி,
லேக் ஏரியா, நுங்கம்பாக்கம்,
சென்னை – 34. – எதிர்மனுதாரர்

சென்னை, நுங்கம்பாக்கம் கக்கன் காலனி, எண்.177 என்ற முகவரியில் வசிக்கும் திரு. S.தனசேகர் என்பவரின் 13.10.2021 நாளிட்ட மனு 21.03.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 32/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப்பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, நுங்கம்பாக்கம் கக்கன் காலனி, எண்.177 என்ற முகவரியில் வசிக்கும் திரு. S.தனசேகர் என்பவரின் 13.10.2021 நாளிட்ட முறையீட்டு மனுவில் கடந்த 26, ஏப்ரல் 2021 அன்று உதவி ஆணையரிடம் புகார் அளித்தேன் மற்றும் 26, ஏப்ரல் 2021 அன்று Act 2005 6(1)ன் கீழ் தகவல் கேட்டு இருந்தேன். 30 நாட்களில் அளிக்க வேண்டிய தகவலை இதுவரையில் அளிக்கவில்லை.

மேல்முறையீட்டு மனு 28.06.2021 Act 2005(19/1)ன் கீழ் தகவலை வழங்குமாறும் கேட்டு இருந்தேன். இதுவரையில் வழங்கப்படவில்லை. மேற்படி முதன்மை தகவல் அலுவலர் அவர்களுக்கு 21.08.2021 அன்று அனுப்பி இருந்தோம் எந்த பலனும் இல்லை. மேலும் 18.10.2021 அன்று மண்டலம்-9 உதவி ஆணையர் அவர்களுக்கு பொதுமக்கள் ஒன்று சேர்ந்து, புகார் அனுப்பி இருந்தோம். புகாரில் பல ஆண்டுகளாக கட்டப்படாமல் இருந்த மழைநீர் வடிகால்வாய், பல புகாருக்கு மத்தியில் கட்டப்பட்டு இதில் இவ்வளவு முறைகேடு நடந்துள்ளது என்பது கண்கூடாக தெரிகிறது. இந்த முறைகேடுக்கு துணையாக இருந்த மண்டலம்-9 உட்பட்ட ஜெயச்சந்திரன் AC, பிரதீப்குமார் EE, மணிமொழி AEE மற்றும் சம்மந்தப்பட்ட காண்டிராக்டர் மீது இன்னும் நடவடிக்கை இல்லை. எனவே ஐயா அவர்களுக்கு இதனால் நான் பெரும் மன உளைச்சலுக்கு ஆளாகி உள்ளேன். இந்த மழைநீர் வடிகால்வாய் பணியில் முறைகேடு நடக்கவில்லை என்றால் இன்னும் ஏன் தாமதம் ACT 2005 6 (1)ன்கீழ் தகவல் இல்லை. ஐயா அவர்கள் சம்பந்தப்பட்ட ஜெயச்சந்திரன், பிரதீப்குமார், மணிமொழி ஆகியோரின் 3 மாத சம்பள தொகை நிறுத்தி

வைக்க வேண்டும். மேற்படி பிரதீப்குமார் EE, மணிமொழி AEE கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலாக ஒரே மண்டலத்தில் பணி வகித்து வருகின்றனர். இவர்களுக்கு துறைரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். 3 ஆண்டுகளுக்கு மேல் ஒரு மண்டலத்தில் பணிவகிக்கக் கூடாது என்பது சட்டவிதி அடிப்படையில் இவர்கள் இம்மண்டலத்தில் தொடர்வதால் தான் மண்டலம் 9, பகுதி 24-ல் நடைபெறும் சென்னை மாநகராட்சி பணி திட்டங்களில் பல முறைகேடுகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. இன்றைக்கும் இவர்கள் மூவர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் எங்கள் ஊரில் இவர்களால் மோசமாக கட்டப்பட்ட கட்டுமானப்பணிகளை நேரில் வந்து ஆய்வு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

2) மனுதாரரின் முறையீட்டு மனுவின் மீது அறிக்கை கேட்டு இம்முறைமன்ற நடுவத்தின் 24.03.2022 நாளிட்ட கடிதம் மூலம் மண்டலம்–09ன், மண்டல அலுவலரிடம் அறிக்கை கோரப்பட்டது.

மண்டல அலுவலர், மண்டலம்–9 பெருநகர சென்னை மாநகராட்சி தனது 18.04.2022 நாளிட்ட கடிதத்தில், "பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -9, வார்டு-110ல் கக்கன் காலனி 2வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன்படி கடந்த 2019-2020ம் ஆண்டு அலுவலக விலைப்படி ரூ.25,00,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் அவர்களிடம் 25.09.2019 அன்று மேற்கண்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெறப்பட்டது. மேலும் பெறப்பட்ட நிதி இசைவு ஒப்புதலின்படி 12.03.2020 அன்று ஒப்பங்கள் கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திருவாளர்கள். பியர்ல் இன்ஜினியர்ஸ் கன்ஸ்டிரக்ஷன்ஸ் சொசைட்டி லிட்., அவர்களுக்கு ரூ.24,46,342/-க்கு (ஜி.எஸ்.டி.உடன்) கடந்த 25.07.2020 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது. பணிக்காலமான 90 நாட்களுக்குள் பணி முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மழைநீர் வடிகால்வாய் பணியானது அதிகப்படியான மழைநீர் வடிய ஏதுவாக 132 மீ நீளத்திற்கு 600 x 750 அளவுள்ள கால்வாய் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அப்பகுதியில் மழைநீர் தேங்காதவாறு அமைக்கப்பட்டுள்ளது. இப்பணியானது ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் மேற்பார்வையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அப்பகுதிவாழ் மக்களுக்கு மழைக்காலங்களில் எவ்வித தண்ணீர் தேக்கமும் இன்றி பொது மக்கள் நன்மதிப்பு பெற்று பணி நல்லமுறையில் முடிக்கப்பட்டுள்ளது. இப்பணியில் மனுதாரர் தெரிவித்தது போல் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை. மேலும் மேற்கண்ட பணிக்கு தாங்கள் கோரப்பட்ட விவரங்களை அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில் கடந்த 25.03.2021 அன்று கோப்பு பணி முடிக்கப்பட்டு பட்டி தீர்வு செய்ய ஏதுவாக பகுதி கணக்கு குழுமம் மற்றும் உள்ளாட்சி தணிக்கை வசம் இருந்த நிலையிலும் அக்கால கட்டத்தில் 26.02.2021 அன்று முதல் 07.05.2021 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருந்த நிலையில் கோப்புகளை கையாள இயலாத நிலை காரணமாக உரிய நேரத்திற்குள் தகவல் அளிக்க இயலாத நிலை ஏற்பட்டது இதனிடையே மனுதாரர் முறைமன்றத்தினை நாடியுள்ளார்.

எனவே மேற்கண்ட பணியில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. எனவே சம்பந்தப்பட்ட அலுவலர்களால் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை" என்று தெரிவித்துள்ளார்.

3) இம்மனுக்கள் தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 19.04.2022 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 7.04.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

4) முறையீட்டு மனுதாரர் 19.04.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

"சென்னை நுங்கம்பாக்கம் கக்கன் தெருவில் ரூபாய் 25 லட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால்வாய் கட்டுமானப் பணி நடைபெற்றது. இப்பணி முடிந்தும், மேற்கண்ட பகுதியில் மழைநீர் தேங்கி வருகிறது. அப்பகுதியில் மேற்கண்ட 25 லட்சம் ரூபாய் செலவு செய்தும், பயன் ஏதும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட பணியை

மேற்கொண்டதில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளன எனவும், முறைகேட்டிற்குக் காரணமான மாநகராட்சி அலுவலர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுக்கும்படியும் இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும், எனது 13.10.2021 நாளிட்ட புகார் மனுவினையே எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

5) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் செயற் பொறியாளராகப் பணிபுரியும் S. பிரதீப்குமார், இளநிலைப் பொறியாளராகப் பணிபுரியும் R. தீனதயாளன் ஆகியோர் 19.04.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்கள் :

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள இடத்தில் மழைநீர் வடிகால்வாய் பணியானது அதிகப்படியான மழைநீர் வடிய ஏதுவாக 132 மீட்டர் நீளத்திற்கு அப்பகுதியில் மழைநீர் தேங்காதவாறு அமைக்கப்பட்டுள்ளது. இப்பணியை மேற்கொண்டபோது எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை. மேலும், மனுதாரர் குறிப்பிட்டிருந்த இடத்தில் உள்ள மழைநீர் வடிகால்வாயில் அடைப்பு ஏற்பட்டு இருந்தது; அவை தற்போது சரிசெய்யப்பட்டு, அப்பகுதியில் தற்போது தண்ணீர் ஏதும் தேங்கவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு மண்டல அலுவலர் -9 அனுப்பியுள்ள 18.4.2022 நாளிட்ட கடிதத்தையே எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" என்று தெரிவித்துள்ளார்கள்.

முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் மற்றும் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் செயற் பொறியாளர், இளநிலைப் பொறியாளர் ஆகியோர்களின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன :

மனுதாரர் திரு. S. தனசேகர் சென்னை நுங்கம்பாக்கம் கக்கன் தெருவில் ரூபாய் 25 லட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால்வாய் கட்டுமானப் பணியில் மழைநீர் தேங்கி வருகிறது எனவும் முறைகேடுகள் நடந்துள்ளதாகவும் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள இடத்தில் மழைநீர் வடிகால்வாய் பணியானது அதிகப்படியான மழைநீர் வடிய ஏதுவாக 132 மீட்டர் நீளத்திற்கு அப்பகுதியில் மழைநீர் தேங்காதவாறு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர் குறிப்பிட்டிருந்த இடத்தில் உள்ள மழைநீர் வடிகால்வாயில் அடைப்பு ஏற்பட்டு இருந்தது; அவை தற்போது சரிசெய்யப்பட்டு, அப்பகுதியில் தற்போது தண்ணீர் ஏதும் தேங்கவில்லை என பெருநகர சென்னை மரநகராட்சி மண்டலம் -9ஐச் சேர்ந்த அலுவலர்கள் தெரிவித்துள்ளதையும் அறியமுடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டிருந்த இடத்தில் உள்ள மழைநீர் வடிகால்வாயில் அடைப்பு ஏற்பட்டு அது சரி செய்யப்பட்டு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்பகுதியில் தண்ணீர் தேங்கவில்லை எனவும் மண்டலம் 9 பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். இருப்பினும் மழைநீர் வடிகாலை அடிக்கடி சுத்தம் செய்ய சம்மந்தப்பட்ட சுகாதார ஆய்வாளருக்கு அறிவுறுத்தப்படுகின்றது. மேலும் கண்காணிப்பு பொறியாளர் ஒருவரை மழைநீர் வடிகால்வாயை நேரடியாக கள ஆய்வு மேற்கொள்ளவும், வடிகால்வாய் கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்யவும், கட்டுமானப் பணிகளில் குறைபாடுகள் ஏதும் கண்டறியப்பட்டால் அதன் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவும் ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The Commissioner of Greater Chennai Corporation is requested to instruct a Senior Superintending Engineer level officer to inspect the works carried out in the location as reported in the petition and ensure that the expenditure has been incurred fairly in a cost-effective and efficient manner without any slippages and attend to the technical shortcomings, if any, in the execution in order to sustain the positive image of the Corporation's work in the breadth and width of the City jurisdiction.

2022–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. S. தனசேகர்,
எண்.177, கக்கன் காலனி,
நுங்கம்பாக்கம், சென்னை– 600 034.

2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

3) மண்டல அலுவலர்,
மண்டலம்–9, பெருநகர சென்னை மாநகராட்சி,
லேக் ஏரியா, நுங்கம்பாக்கம்,
சென்னை – 34.

4) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர், (Nodal Officer)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

// ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

26/4/22

செயலாளர்.